2½ கிலோ மீட்டர் நடந்துவந்து, மக்கள் உணவுப் பொருள்களை வாங்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். எனவே, அவர்களுடைய கஷ்டத்தைத் தவிர்க்க இராஜகோபாலபுரம் கிராமத்திலேயே அமுதம் அங்காடி ஒன்றை அமைக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற இராஜகோபாலபுரம் பகுதியில் மொத்தம் 183 குடும்ப அட்டைகள்தான் இருக்கின்றன. இப்போது குத்தாலம் அங்காடி எண். 1 நியாய விலைக் கடைப் பகுதியிலே தான் இந்த அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. அந்தக் கடையிலேயே மொத்தம் 735 குடும்பக் கார்டுகள்தான் இருக்கின்றன. ஆகவே, அதிலிருந்து பிரித்து தனியாக இதற்கென்று ஒரு அங்காடி அமைப்பதற்குப் பொருளாதாரச் சூழ்நிலைகளும், மற்ற சூழ்நிலைகளும் இடம் தரவில்லை. குறிப்பாக, ஒரு கிலோ மீட்டர் தொலைவிலேதான் அந்தப் பகுதியே இருக்கிறது. ஆகவே, அங்கே ஒரு புதிய கடை திறக்க அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 144. டாக்டர் மு. காளிராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

144—

மருத்துவத்துறையில் பணியாற்றுபவர்களின் இடமாறுதல்.

*** 9675--டாக்டர் மு. காளிராஜன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவத்துறையில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் பணியாற்றுபவர்களை (மருத்துவர், செவிலியர் ஆகியோர்) மற்ற அரசு ஊழியர்களைபோல் வேறு இடங்களுக்கு பணி மாறுதல் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நிர்வாக தேவைக்கேற்ப அரசு மருத்துவமனைகளில் மூன்று ஆன்டுக்கு மேல் ஒரே இடத்தில் பணியாற்றும் மருத்துவர்,செவிலியர் ஆகியோர்கள் மற்ற அரசு ஊழியர்களைப்போலவே பணிமாறுதல் செய்யப்படுகிறார்கள். எனவே தனியாக செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

டாக்டர் மு. காளிராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் பணிபுரிகின்ற மருத்துவர்கள் ஒரே இடத்தில் பல இடங்களில் பத்தாண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிகின்றனர். நீண்ட பல வருடங்களாக ஒரே இடத்தில் பணிபுரிவதால் அவர்கள் தங்கள் பணிகளைச் சரியாகச் செய்வதில்லை. பல மருத்துவர்கள் அரசு மருத்துவமனைகளில் இருந்து கொண்டு தனி மருத்துவமனைகள் வைத்துள்ளதால் குறைந்த நேரமே அரசு மருத்துவமனைகளில் பணிபுரிகின்றனர். ஆகவே, அவசியமாக மூன்று வருடத்திற்கு ஒரு முறை பணிமாற்றம் செய்யப் பரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு தி ந. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாக வசதிக்கேற்ப, தேவையிருந்தால் செய்கிறோம் என்றுதான் நான் தெரிவித்தேன். மூன்றாண்டுகளுக்கு மேலே ஒரே இடத்தில் பணியாற்றும் மருத்துவர்களும் இருக்கிறார்கள். அதற்குக் காரணம், இந்தத் துறையைப் பொறுத்தவரையில், குறிப்பாக மருத்துவர்களைப் பொறுத்த வரையில் இதிலே கொஞ்சம் சிக்கல்கள் இருக்கின்றன. காரணம், ஒரு டிப்பார்ட்மென்ட்டை ஒருவர் இருந்து ஆரம்பித்து எஸ்டாபிளிஸ்மெண்ட் செய்துவிட்டால், அதற்கு பிறகு வேறு ஒருவர் வருகிறபோது அதே வேகத்தோடு அதை இயக்க முடியாத சூழ்நிலைகூட ஏற்பட்டு விடுகிறது. நோயாளிகளும் அந்த மருத்துவரே இருக்கவேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவிக்கிற காரணத்தால் அதே மருத்துவர்கள் தொடர்ந்து இருக்க வேண்டிய சூழ்நிலை, குறிப்பாக மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அதிகமாக இருக்கிறது. அதைப் போல, ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பிட்டல்களிலும் இந்தப் பிரச்சினை இருக்கிறது. ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், தாலுகா மருத்துவமனைகளிலும் இவ்வளவு பெரிய பிரச்சினைகள் இல்லை. எனவேதான், மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை மாற்றுவதன் மூலமாகப் பல சிக்கல்களையும் சந்திக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதுபோக, இருக்கின்ற மருத்துவர்களை மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மாற்றுகிறபோது, அவர்கள் விடுப்பிலே சென்று விடுகிறார்கள். மற்ற துறைகளிலே இருக்கிறவர்களுக்கு அரசினுடைய சம்பளத்தின் தேவை இருக்கிறது. இவர்களைப் பொறுத்தவரையில் பிராக்டிசிலே வருமானம் இருப்பதால், உடனே விடுமுறையில் சென்றுவிடுகிறார்கள். இந்தச் சிக்கலும் அரசாங்கத்திற்கு இருந்து கொண்டிருக்கிறது. இதை எல்லாம் கணக்கிலே வைத்துத்தான் அவர்கள் ஒழுங்காகப் பணிக்கு வருகிறார்களா என்பதைப் பார்க்க நாங்கள் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்போது ஒவ்வொரு மாவட்டத்தில் 6 மாவட்ட மருத்துவ அதிகாரிகள்

இருக்கிறார்கள். அந்த 6 பேரும் ஒவ்வொரு வாரமும் இன்ஸ்பெக்ஷன் போய், ஒவ்வொரு திங்கட்கிழமையிலும் இன்ஸ்பெக்ஷன் ரிப்போர்ட் அனுப்ப வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதை அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அதை அடிப்படையாக வைத்து அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கிறோம். அந்த மருத்துவர்களை அழைத்துப் பேசி, ஜனவரியிலிருந்து—இதற்கு முன்னாலே நடவடிக்கை எடுத்திருக்கிறோம்—வராமல் இருந்தால் மிகக் கடுமையான நடவடிக்கை எடுப்போம்; காலதாமதமாக வரக்கூடியவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்போம் என்று கூறியிருக் கிறோம். எனவே, தற்போது ஓரளவு வெற்றிகரமாக வந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டாக்டர் அரசு மருத்துவமனைகளில் இருந்தால் கூட நோயாளிகள் அரசு மருத்துவமனைகளுக்குப் போனால் இங்கே சரியான மருந்து கிடையாது; நாங்கள் கிளினிக் வைத்திருக்கிறோம், 5 மணிக்குமேல் அங்கே வாருங்கள் என்று சொல்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 3 ஆண்டுகளுக்குள் மருத்துவர்களை மாற்றுவது பற்றியது பிரச்சனை. ஒட்டு மொத்தமாக மருந்து, மாத்திரை இதிலே சேர்த்தால் எவ்வளவோ துணைக் கேள்விகள் வரும். இது அவர்களுடைய பணி பற்றிய விவகாரம். அதுபற்றி மட்டும் கேளுங்கள்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: தலைவரவர்களே, தொடர்ந்து 3 ஆண்டுகளாக அவர்கள் அதே இடத்தில் இருந்தால் அவர்கள் சரியான முறையில் 'ட்ரீட்மென்ட்' செய்வதில்லை. ஆகவே, கண்டிப்பாக அமைச்சர் அவர்கள் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றுவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அரசு மருத்துவர், அரசு மருத்துவமனையிலே பணியாற்றுகிறார் என்று சொன்னால் அங்கே வரக்கூடிய நோயாளிகளை ஒழுங்காகக் கவனிக்க வேண்டியது அவருடைய கடமை; அந்தக் கடமை அவருக்கு இருக்கிறது. அதிலிருந்து தவறிப்போகிறவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் எந்த நேரத்திலும் தயங்காது. அதற்கான ஏற்பாடுகளைத்தான் இப்போது செய்துகொண்டிருக்கிறோம். இன்ஸ்பெக்ஷன் செய்துகொண்டிருக்கிறோம். 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை

ஒருவரை மாற்ற வேண்டும் என்பதிலே எனக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. அதற்கு எல்லோரும் ஒத்துழைப்பு கொடுத்தால், எல்லோருக்கும் ஒரேவிதமான ரூல்ஸை அப்ளை செய்வதற்கு எங்களுக்கு வாய்ப்பை நீங்கள் கொடுத்தால் நிச்சயமாக அமலாக்குவதிலே சிரமம் இருக்காது. எனவே, அதை எல்லோரும் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன்; நீங்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் மு. சீனியம்மாள்.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் தாலுகா தலைமை மருத்துவமனைகளில் பணியாற்றுகின்ற மருத்துவர்களுடைய குழந்தைகள் நலன், மற்றும் மேல்படிப்பைக் கருத்தில் கொண்டு சென்ட்ரல் டவுன்களில் வேலை பார்க்கிற மருத்துவர்களை 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாறுதல் கொடுக்க வேண்டும். மாறுதல் கொடுத்தால்தான் கிராமப்புறங்களில் இருந்து வருகிற மருத்துவர்கள் பயனடைவார்கள். அவர்களும் இந்த 'டவுன்' வாழ்க்கையை அனுபவிப்பார்கள். அவர்களுடைய குழந்தைகளும் கிராமப்புற வாழ்க்கையிலிருந்து மாறி, நல்ல மேல்படிப்பு படிக்க வசதி ஏற்படும். ஆகையால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில் கொண்டு தாலுகா தலைமை மருத்துவமனைகளில் இருக்கிற மருத்துவர்களை ஜி. எச். அதாவது டவுன் மருத்துவமனைகளுக்கும் டவுன் மருத்துவமனைகளில் நீண்டநாள் இருப்பவர்கள் கிராமப்புற மருத்துவமனைகளுக்கும் மாறுதல் செய்ய நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் பணியாற்றக்கூடியவர்கள் கிராமப்புறங்களில் பணியாற்றிவிட்டு வந்தவர்கள்தான். அவர்கள் நேரடியாக இங்கே வரவில்லை. இப்போது நாம் வைத்திருக்கிற முறையே கூட குறைந்தபட்சம் ஒவ்வொரு மருத்துவரும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு கிராமப்புற மருத்துவமனைகளில், பிரைமரி ஹெல்த் சென்டர்களில் பணியாற்ற வேண்டும் என்று வைத்திருக்கிறோம். பி.ஜி. என்றால் ஓராண்டு காலம், டிப்ளமா என்றால் 2 ஆண்டு காலம், அண்டர் கிராஜூவேட் என்றால் 3 ஆண்டு காலம் என்று வைத்திருக்கிறோம். இந்தமுறையில் அவர்கள் பணியாற்றிவிட்டுத்தான் வருகிறார்கள். இந்த வகையிலே இப்போது அங்கே இருக்கிறவர்களை மாற்றுகிறபோது அதிலே சில சிக்கல்கள் வருகின்றன. இவர்கள் ஏற்கெனவே அங்கே போயிருக்கிற காரணத்தால் மாற்றுகிறபோது விடுமுறையில் போய்விட்டால் மருத்துவர் இல்லாத சிக்கல் வருகிறது. இருந்தாலும் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை

ஒருவரை மாற்ற வேண்டும் என்றும் அதற்கு ஒத்துவராதவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொதுமக்களின் வேண்டுகோளுக் கிணங்க 3 ஆண்டுகளுக்கு மேலாக ஒருவர் அங்கே இருந்தாலும் மேலும் நீட்டிப்பதாகவும் டிப்பார்ட்மென்ட் சீனியராக, அனுபவம் மிக்கவராக ஒருவர் இருந்தால் அவர் தொடர்ந்து அங்கே இருக்க காலத்தை நீட்டிப்பதாகவும் சொன்னார்கள். ஆனால் டாக்டர்கள் மீண்டும் அதே இடத்திற்கு வருகிறபோது, நீங்கள் எப்படி மறுபடியும் இந்தப் பணிக்கு வந்தீர்கள் என்று கேட்டால், நாங்கள் மாநில அளவில் தாலுகா அளவில் அரசு மருத்துவர்கள் சங்கத்தின் உறுப்பினர்களாக, அந்தச் சங்கங்களுடைய நிர்வாகிகளாக இருக்கிறோம். அப்படி அரசு மருத்துவர் சங்கங்களுக்கு நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவர்கள் மாறுதல் செய்யப்படக்கூடாது என்று விதி இருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படி ஒரு விதி இருக்கிறதா? சில மருத்துவர்கள் 6 முதல் 10 ஆண்டுகள் வரையில் ஒரே இடத்தில் அரசு மருத்துவர் சங்க நிர்வாகிகள் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அப்படி விதி இல்லை என்றால் அவர்களை மாற்றிவிட்டு, வேறு மருத்துவர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நம்முடைய அரசியல் அமைப்பிலே ஒவ்வொரு சங்கத்தையும் வைத்துக்கொள்வதற்கு நாம் அனுமதி தந்திருக்கிறோம். அவர்கள் சங்கம் வைத்துக் கொள்வதிலே எந்தவிதமான கருத்துவேறுபாடும் இல்லை. ஆனால் அந்தச் சங்கங்கள் எதற்காக, அவர்கள் பரிந்துரைக்காக வரவேண்டுமென்பதற்கு ஒரு அளவு இருக்கிறது. எனவே, மொத்தமாக அந்த மருத்துவர்களுக்கு அல்லது அவர்களுடைய சங்கத்தைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு ஏதாவது பிரச்சினை ஏற்படுகிறது அல்லது அவர்களுடைய உரிமைகள் பாதிக்கப்படுகிறது என்கின்ற அப்படிப்பட்ட நேரங்களிலே அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்வதற்காகத்தான் அந்தச் சங்கங்கள் இருக்கின்றன. அந்த அளவிற்குத்தான் அந்தச் சங்கங்கள் வரலாம். ஆனால் யார் மீதாவது தவறு இருந்து, அந்தத் தவறு இருப்பவர்கள்மீது நடவடிக்கை எடுத்தாலோ மாற்றம் செய்தாலோ அல்லது அவர்கள்மீது வேறு நடவடிக்கை எடுத்தாலோ அந்தச் சங்கங்கள் வந்துவிட முடியாது. எனவே,

சங்கத்தினுடைய அப்படிப்பட்ட கோரிக்கைகளை நாங்கள் ஏற்றுக் கொள்வதும் இல்லை. ஆனால் அதே நோத்திலே ஒரு மாவட்டத்திலே ஒரு சங்கத்தினுடைய நிர்வாகி இருக்கிறார் என்று சொன்னால் அவரை கன்வென்ஷனாக நாம் வைத்திருக்கிறோம். அவர்களை அங்கே வைத்துக்கொள்வது என்பதையும் அந்த மாவட்டத்தைவிட்டு வெளியிலே அனுப்புவது இல்லை என்பதையும் ஒரு கன்வென்ஷனாக வைத்திருக்கிறோமேயொழிய அதற்காக விதி என்று தனியாக இல்லை. அவர்களே தவறு செய்யக்கூடியவர்களாக, தொடர்ந்து பொது மக்களுக்கு விரோதமாக, பொதுமக்களுக்குச் செய்ய வேண்டிய பணியை, கடமையை ஒழுங்காகச் செய்யவில்லை என்றால் எந்தத் தலைவராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும். எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தேனி பன்னீர் செல்வம்.

திரு. தேனி. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில், சிறப்புப் பட்டங்கள் எம். டி., எம். எஸ்., டி.சி.எச்., டி.ஜி.ஓ., போன்ற சிறப்புப் பட்டங்கள் பெற்று, உயர் கல்வித் தகுதி பெற்ற மருத்துவர்களை மாற்றம் செய்யும்போது, அதே அனுபவம் அல்லது அதே கல்வித் தகுதியுள்ள டாக்டர்களைத்தான் பதிலுக்கு மாற்றம் செய்ய வேண்டும். ஏனென்றால், அந்த உயர்கல்வி அனுபவம் பெற்ற டாக்டர்கள் அந்தப் பகுதியிலிருந்து மாறுதல் செய்யப்படும்போது அந்தச் சிறப்புத் துறைக்கான மருத்துவர்கள் இல்லாமல் போகின்ற நிலை ஏற்படுகிறது. எனவே, இப்படிப்பட்ட தகுதியுடைய மருத்துவர்களை மாற்றும்போது, வெறும் எம்.பி.பி.எஸ். பட்டம் மட்டும் படித்த டாக்டர்களை அந்த இடங்களுக்கு மாற்றுவதைத் தவிர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் இதைப்பற்றித்தான் தெரிவித்தேன். மக்கள் அங்கே விரும்புகிறார்கள் என்று சொன்னது. இதுபோல ஒரு ஸ்பெஷாலிட்டியிலே அவர்கள் ஸ்பெஷலைஸ் செய்து அந்த டிபார்ட்மெண்டை ஆரம்பித்து விடுகிறார்கள். அவர்களை மாற்றுகிறபொழுது வரக்கூடியவர்கள் அதைத் தொடர்ந்து செய்யக்கூடிய வசதி இல்லாதவர்களாக அல்லது அந்தப் படிப்பு இல்லாதவர்களாக இருக்கிறார்கள். எனவேதான் இந்தச் சிக்கல் இருக்கிறது என்று நான் சொன்னேன். அதன் காரணத்தால்தான் ஒரு இடத்திலே ஒரு டிபார்ட்மெண்டை ஆரம்பித்துவிட்டால் அது தொடர்ந்து அங்கே இருக்கவேண்டுமென்ற முறையை நாங்கள் வைத்தோம். இப்போது

இதையெல்லாம் ஈடுகட்டுகின்ற வகையிலேதான், இந்தச் சிக்கலே வராமல் இருப்பதற்காக ஏற்பாடு செய்கின்ற வகையிலேதான் தாலுகா மருத்துவமனைகளிலேகூட ஸ்பெஷாலிட்டி விங்ஸ் துவக்கப்பட வேண்டும்; ஸ்பெஷலிஸ்ட்ஸ் அங்கே நியமிக்கப்படவேண்டுமென்ற ஒரு ஏற்பாட்டை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு நமக்குச் சொல்லியிருக்கிறார்கள். இதைச் செய்து முடிக்கிறபோது இந்தப் பிரச்சினைகள் முழுமையாக தீர்க்கப்படும். இப்போது கல்லூரி மருத்துவமனைகளிலே ஒவ்வொரு டிபார்ட்மெண்டிலேயும் இன்ன படிப்பு படித்தவர்களுக்காக இந்த இடம் என்று நாம் ஒதுக்கி வைத்திருக்கிறோம். மற்ற இடங்களிலே அப்படி இல்லை. அதையும் அதேபோல, என்ன படிப்பிற்காக இந்த இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, எந்த டிபார்ட்மெண்டிலே என்ன ஸ்பெஷாலிட்டிக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற வரைமுறையைக் கொண்டுவர இருக்கிறோம். இதை ஏற்கெனவே 20 ஆண்டு காலத்திற்கு முன்பாகவே வந்திருக்கவேண்டிய காரியம். வராமல் போன காரணத்தால் இப்போது சிக்கலை நாம் அனுபவித்துக் கொண்டு இருக்கிறோம். இந்த நேரத்திலாவது அதை சரி செய்யவேண்டுமென்ற ஏற்பாட்டில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 145. திரு. டி. வேலையா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

145—

சித்த, ஆயுர்வேதம், யுனானி மருத்துவ முறைகளை அரசு மருத்துவமனைகளில் நடைமுறைப்படுத்தல்.

** 22138*--*திரு. டி. வேலையா :*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சித்த, ஆயுர்வேதம், யுனானி முறை மருத்துவம் எந்த அளவுக்கு அரசு மருத்துவமனைகளில் நடைமுறையில் உள்ளன ?

(ஆ) 1992-93 ஆம் ஆண்டில் இம்முறையில் சிகிச்சை பெற்றவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சில மாவட்ட தலைமை மருத்துவமனை, தாலுகா மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றில் சித்த மருத்துவப் பிரிவுகள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. மூன்று மாவட்ட தலைமை